Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

| Bureau de la Direction:— RUE D'AMBALATADOU AYER MADAM NO. 4, Pondichery | நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க் கல்லா லரிது. குறள். | காரியாலயம்:— அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி நெ. 4, புதுவை. |
|---|---|---|

VOL. I. { புதுவை, பவ-௵ ஆவணி-௴ -௧௫௳ (30—8—34) } No. 40.

## திருமந்திரம்

வேட்கை மிகுந்தது மெய்கொள்வா ரிங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி யொன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.

ஆண்டு பலவுங் கழிந்தன வப்பனைப்
பூண்டு கொண்டாரும் புகுந்தறி வாரிலை
நீண்டன காலங்க ணீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே.

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கட மென்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே.

ஒன்றிய வீரெண் கலையு முடன்றன
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.

ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாம
லீச்சம் பழத்துக் கிடருற்ற வாறே.

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
யருத்தமென் றெண்ணி யறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே.

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்)

# வித்தகம்

புதுவை,
பவ-ஹூ ஆவணி-மீ 15உ

## சமாதி

இறந்தோர் பிணங்களை நிட்டையில் இருந்த பாவனையோடு நிலத்துட் புதைத்து விட்டு அதனைச் "சமாதி" எனக் கொண்டாடுவது உலக சம்பிரதாய வகைகளுள் ஒன்று. ஒருவர் இறந்தபின் அவர் சரீரம் "சமாதி" வைக்கப்பட்டது என்றால், சூனிய நிலையை அடைந்த வினைவடிவ நாம ரூபமாகிய அவரைத் தெய்வீகம் வாய்ந்தவர் எனவும் நித்தியத்துவம் பெற்றவர் எனவும் போற்றுவது உலகியலாயிற்று. ஆதலால் சமாதி என்பது என்னை? அதன் உண்மைதான் யாது? அதன் பண்பும் பயனும் யாவை? எனின், அவையே இச் சிறிய கட்டுரையில் ஒருவாறு கூறுவான் எடுத்துக்கொண்ட பொருளாகும்.

சமாதி என்றால் என்னை? எனின், அதுதான் பூரணமான ஒடுக்கம்—பூரணமான சாந்தி என்று கூறப்படும். இருவினை சொரூபமாய் அவற்றின் நிறை பேதத்தால் ஓவாது அசைகின்ற—அவச்சலனமடைகின்ற உடலுயிர் (சரீரமும் மனமும்) நிறைமுறை தழுவி இயற்கை நெறியால் அமைதி பெறுவதே ஒடுக்கம் என்பது – சாந்தி என்பது. மன அமைதி இன்றாயின் சரீர அமைதி ஏற்படமாட்டாது. சரீர அமைதி இன்றாயின் மன அமைதி ஏற்படமாட்டாது. சரீரமும் மனமும் அந்நியோந்நிய சம்பந்த முடையன என்பது வெள்ளிடை. மனமே வாசி எனப்படுவது. வாசியே உயிர்—பிராணன்—சீவன். ஆதலால் இருவினை சொரூபமாகிய உடலுயிர்களின் அசைவு நிறை சமம் பெற்று அசுத்தம் நீங்கி அமலமடைதலே—நிறை தழுவி அசையாமல் அசைந்து நிற்றலே—சீவத்துவம் நீங்கிச் சிவத்துவம் திகழப்பெறுதலே-தான் அவன் ஆதலே வாய்மையான சமாதி எனப்படும் என அறிதல் வேண்டும். இயற்கை முறை இதுவே என்க. இயற்கை நிலையாகிய சகஜநிலை–சகசநிட்டை–சிவ சம்பந்தம்—சிவயோகம் இதுவே என்க. சமாதி சகஜ நிட்டை சிவயோகம் என்பன ஒன்றே. இயற்கை முறையால் உடலுயிர்களின் அசைவு நிறை சமம் பெறாதபோது—இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்பன அமையப் பெறாதபோது வாய்மையான சமாதி—சாந்தி—சகசநிட்டை—சிவ சம்பந்தம் — நித்தியத்துவம் ஏற்படமாட்டாது. நிறை பேதத்தால் சீவத்துவமே — மரணமே — பிறவி நெறியே உளதாகும் என்க.

"ஆங்ஙனங்குறித்த ஆய்முதற் பொருளொடு
தான் பிறனாகாத் தகையது சமாதி."

என்றனர் பெரியார். பின் வரும் பிரபல சுருதிப்பிரமாணம் "தான் அவன் ஆதலே" வாய்மையான சமாதி என அதன் பண்பினையும் பயனையும் நன்று புலப்படுத்துகின்றது.

### திருமந்திரம்

தானவ னாகுஞ் சமாதிகை கூடினா
லான மலமறுமப் பசுத் தன்மைபோ
மீனமில் காய மிருக்கு மிருநிலத்
தூனங்க ளெட்டு மொழித்தொன்று
[வோர்கட்கே.

(ஷ 8-ம் தந். நின்மலாவத்தை செ. 17.)

(இ-ள்) ஊனங்கள் எட்டும் ஒழித்து ஒன்றுவோர்கட்கு—வினைப்போக தேகமாகிய மருளுடம்புக்குரிய குற்றங்கள் எட்டையும் (வாய்மையான சாதக யோகங்களால்) நீக்கி (மாற்றி) மதியாகிய பதியோடு ஒன்றும் முத்தி நெறியில் நிற்கும் மெய்யடியார்க்கு, தான் அவன் ஆகும் சமாதி கைகூடினால்—சீவன் சிவமாதலாகிய வாய்மையான் சமாதிநிலை கைகூடப்பெறுங்கால், ஆன மலம் அறும்—அநாதியே பொருந்தியுள்ளதாகிய மும்மலமும் ஒழியும், அப்பசுத்தன்மைபோம் —அம்மல சம்பந்தத்தால் ஆய சீவத்துவம் கெடும், இரு நிலத்து ஈனமில் காயம் இருக்கும் — வியாபகமாகிய இப்பிரபஞ்சத்தின்கண் (மலம் அமலமாகப் பெற்றமையால்) "ஈனமில் காயம்" எனப்படும் ஓ வடிவம் என்னும் பிரணவ மந்திர சரீரம் குருவடிவாகி விளங்கும் என்பதாம்.

தான் அவன் ஆதலே சமாதி இலக்கணம் என்பது இம்மந்திரத்தால் வரையறுக்கப் பட்டது. இப்பெற்றி கைகூடப் பெறுவார் யாவர்? எனின், அவர் தாம் குருவருளால் பெறப்படும் வாய்மையான சாதக யோகங்களால் ஊனங்கள் எட்டும் ஒழித்துப் பதியோடு ஒன்றுதலாகிய முத்தி நெறியில் நிற்போர் என்று கூறப்பட்டது. ஊனம் என்றால் என்னை? ஊன் சம்பந்தமுடையது ஊனம் எனப்படும்.

ஊன் என்பது அசுத்த தநுவாகிய வினைப்போக தேகம் அல்லவா? அதனைப்பற்றிய அழுக்கே குற்றமே ஊனங்கள் எனப்பட்டன. அவை எட்டு எனப்பட்டன. அவை தாம் யாவை? அவைதாம் பிறப்பு வளர்ச்சி (அசுத்த நிறையின் ஆக்கம்) பசி பிணி நரை திரை மூப்பு சாக்காடெனப்படும். அழுக்கை அழுக்கால் அகற்றும் உபாயத்துக்கு ஒப்பக் குருவருளால் நிறைமுறையான அருந்தல் பொருந்தல் கைவரப் பெற்றோர்க்கே ஊனங்கள் ஒழியும் என்பது முன்னும் பல கட்டுரைகளில் விளக்கிக் கூறப்பட்டன. ஆதலின் ஈண்டும் விரித்தல் மிகை. ஊனங்கள் நீங்கப் பெற்றாலன்றிச் சீவத்துவம் நீங்காது. ஊன் சம்பந்தமுடையதாய் அதனின் வேறாகாது நிற்பதே உயிர்—சீவன் என்பது. ஆதலால் சிவத்துவம் திகழப்பெறுதற்கு ஊனம் ஒழிய வேண்டும்; சீவத்துவம் நீங்க வேண்டும் என்க. இது பற்றியே "ஆனமலம் அறும் அப்பசுத் தன்மைபோம்." என்றனர். பின் வரும் பிரமாணங்கள் தம்முள்ளே "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய திருவடிகண்டு அதனைப்பற்றி முத்தி நெறிச் செல்லும் மெய்யடியார்க்கு ஊனங்கள் ஒழிதலை நன்று புலப்படுத்துதல் கண்டு கொள்க.

## அப்பர் தேவாரம்

பிறப்புமூப்புப்பெரும்பசிவான்பிணி
இறப்புநீங்கியிங்கின்பம்வந்தெய்திடும்
சிறப்பர் சேறையுட்செந்நெறியான்கழல்
மறப்பதின்றிமனத்தினுள்வைக்கவே.

(ஷை திருச்சேறை — திருக்குறுந்தொகை
[செந்நெறி—முத்திநெறி]
(செ. 3)

## திருவாய்மொழி

களிப்புக்கவர்வு மற்றுப் பிறப்புப் பிணி
[மூப்பிறப்பற்று
ஒளிக்கொண்ட சோதியமாய் உடன்
[கூடுவது என்றுகொலோ.

(நம்மாழ்வார்–2–ம் பத்து 3–திருமொழி
செ. 10)

[ஒளிக்கொண்ட சோதியம்— ஊனம் ஒழிந்து ஒளிமயமான வடிவம்.]

## குறள்

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது.

(ஷை 23–ம் அதி–ஈகை செ. 7).

[இதன் உண்மைப் பொருளை "வித்தகம்" இல. 30 பக்கம் 8 இல் காண்க.]

## சித்தாந்த சிகாமணி

மான மின்றியே சிவத்தினில் வைத்த
[விந்தியத்தோன்
ஊன மொன்றிய மூப்பொடு முயிர்விடு
[மரணம்
தானும் பசிதாக மென்றிவற்றினைச்
[சாரான்
வானமொன்றொடும் பற்றிலாவாறென
[மன்னோ.

(ஷை இந்திரியாநுக்கிரகத்தலம் செ. 4.)

## திருஞானசம்பந்தர் தேவாரம்

தரைமுதல் உலகினில் உயிர்புணர்தகைமிக
விரைமலிகுழலுமையொடுவிரவது செய்து
நரை திரை கெடுதகவது அருளின் எழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறையிறையே.

(ஷை திருவலிவலம் திருவிராகம் பண்—
வியாழக்குறிச்சி செ. 6)

இன்னும் 'ஊனை இருளற நோக்கும் ஒருவர்க்கு, வானகமேற வழி எளிதாமே" (திருமந்திரம் 8-ம் தந். நின்மலாவத்தை செ. 13) என்பதனாலும் ஊனம் நீங்கப்பெறாதவிடத்து—ஊன் ஒளிமயமாக மாற்றமடையாதஇடத்து முத்தி நெறிச் சென்று தான் அவன் ஆகும் சமாதி கைகூடுதல் முயற்கொம்பே என்பது நன்குவற்புறத்தப் பட்டமை கண்டு கொள்க. மருளுடம்பு விமலமாய் அமலமாய் மாற்றமடைய வேண்டும். அப்பொழுதுதான் ஊனங்கள் எட்டும் ஒழியும். ஒழியவே அவற்றோடு தொடர்புடைய குற்றங்கள் எல்லாம் ஒழியும். ஊனம் நீங்கவே உடல் ஒளிமயமாகும். சீவத்துவம் கெடும். சிவத்துவம் திகழும். இதுவே சிவசம்பந்தம் — சைவம் — வாய்மையான சமாதி என்க.

தானற நின்ற இடம் அகப்பேய்
சைவங்கண்டாயே
ஊனற நின்றவர்க்கு அகப்பேய்
ஊனமொன்றில்லையடி.

என்றனர் வித்தகச் சித்து மூர்த்தி ஒருவர். ஊன் அற நின்ற நிலையே தான் அற நின்ற நிலை. இது தான் சமாதி — வாய்மையான சமாதி — தான் அவன் ஆகும் சமாதி என அறிக. தான் அவன் ஆதல் என்றால் என்னை? அது தான் ஊனம் நீங்கிய உடலகத்துச் சிவம் பூரணமாகக் குடிபுகப் பெறுதலாகும். "என்னை முன் ஆளுடையீசன் என் அத்தன் எழுந்தருளப் பெறிலே" என்றனர் தான் அவன் ஆகும் சமாதி கைகூடப்பெற்ற மணிவாசகப் பிரபு. உடலகத்து ஈசன் அணு அணுவாகக் குடி புகுதலும் பாசமாகிய மலம் மலமாகிய ஊனம் அணு அணுவாகக் கெடுதலும் அஃதாவது அமல நிறை என்னும் அமல ஒளி ஆக்கமுறுதலும் அசுத்த நிறை என்னும் ஊனம் கேடடைவதும் ஒருங்கே நிகழ்வனவாகும். இதனால் சாதலுறாச் சாதல் என்னும் சீவத்துவம் நீங்குதல் உளதாகும். சிவத்துவம் திகழும். திகழவே "ஈனமில் காயம்" என்னும் பிரணவ மந்திர சரீரம்—பஞ்சாக்கர தேகம் (ஓ வடிவம்) உளதாகும். இவ் அரிய பெரிய வேத உண்மையையே

நத்தம்போற் கேடு முளதாகுஞ்சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

என்னும் செந்நாகப் புலவர் தெய்வத் திருக்குறளாலும் நன்று வலியுறுத்தப்பட்டது என அறிக. ஊனம் அறவே ஒழிந்த இவ் ஓ வடிவமே குருவடிவம்—சதாசிவ வடிவம் என்க. சீவன் முத்தர் வடிவம் இதுவே. இவ்வடிவம் கைவரப்பெற்ற எம்அண்ணல் திருமூலர் பின் வருமாறு அருளியதும் இவ் உண்மையை நன்று வலியுறுத்தி நிலை நாட்டுதல் கண்டு கொள்க.

## திருமந்திரம்

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
னந்தி யருளாற் சதாசிவனாயினேன்
னந்தி யருளான்மெய்ஞ் ஞானத்து
[னண்ணினே
னந்தி யருளாலே நானிருந்தேனே

(ஷை திருமூலர் வரலாறு செ. 20)

[மூலன்—சிவம்—அமல நிறை—சத்துவம். காலன்—அசுத்த நிறை—ஊனம். நிறைதவறினல் காலன். நிறைகொண்டால் மூலன்.]

"நந்தியருளாலே நான் இருந்தேனே" என்பது வாய்மையான சமாதியுடைய சீவன்முத்தர்க்குரிய "ஈனமில்காயம் இருக்கும் இருநிலத்து" என்பதனை நன்று விளக்குகின்றது. ஊனம் நீங்கியதற்குச் சான்று யாது? நிழற் சாயை இல்லாது இருப்பதேயாகும். சாதலைத் தரும் ஐயே—அசுத்த பஞ்சபௌதிக நிறையே ஊனம் எனப்படுவது—இருள் எனப்படுவது—சாயை எனப்படுவது என்க. (சா + ஐ = சாயை) நிழற் சாயையாகிய ஊனம் நீங்கிய பிரணவ மந்திர சரீரமே சதாசிவ வடிவம் என்பது.

"ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள்
[ஈசனே."

என்னும் சிவவாக்கியர் திருவாக்காலும் நன்று வற்புறுத்தப் பட்டமை கண்டுகொள்க. இத்தன்மை வாய்ந்த சீவன்முத்தர்-வாய்மையான சமாதியுடைய—பூரணமான சகச நிட்டையுடைய தத்துவப்பெரியார் ஊனங்கள் அறவே ஒழியப் பெற்றவராதலால் நித்தியானந்தராய் வதிவர். ஊனம் நீங்கிய இவ் அமல வடிவுக்குப் பிணி ஏது? பசி ஏது? நரை ஏது? திரை ஏது? மூப்பேது? சாக்காடு ஏது? இத்தகைய அமலவடிவம் பிணமாகி விழுமா? "சமாதி" என்று நிலத்துட் புதைக்கப்படுமோ? இத்தகைய அமலவடிவமுடைய சீவன்முத்தர் சிலகாலம் உலக குரவராகி (ஜெகத்குரு) வீற்றிருந்து பக்குவர்க்கு அநுக்கிரகம் புரிந்து காலக்கிரமத்தில் அவ் அமல வடிவமாகிய ஓ வடிவமும் அருளாகிக் கரைய மறைந்து சிவாங்கமாவர்—உலகு கண்டு போற்ற மறைந்து உண்மை முத்தியடைவர் என அறிக. வாய்மையான சமாதியின் பண்பும் பயனும் இவையே என்பது வேதாகம உண்மையாதல் நன்று கடைப்பிடிக்க. இவ்வுண்மை நன்று யாப்புறும் வண்ணம் இன்னும் சில கூறி இக்கட்டுரை முடிக்கப்படும்.

இயற்கையோடு ஒத்து நிற்றலாகிய சகச நிட்டை உடையவரே வாய்மையான சமாதி உடையவருமாவர். பின் வரும் ஔவை திருவாக்கும் வாய்மையான சகசநிலையே தான் அது ஆகும் சமாதிநிலை என்பதனை நன்று வலியுறுத்துகின்றது.

நன்றென்றுந் தீதென்று நானென்றுந்
[தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே—நின்ற
[நிலை
தானதுவாந் தத்துவமாஞ் சம்பறுத்தார்
[யாக்கைக்குப்
போனவாதேடும் பொருள்.

(மூதுரை, வாக்குண்டாம்)

(இ-ள்) நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும் அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே—இது நல்லது என்றும் இது தீயது என்றும் இது செய்தவன் நான் என்றும் இது செய்தவன் அவன் என்றும் இது ஆகாது என்றும் இது ஆகும் என்றும் வியஷ்டியான சுட்டுணர்வு கொண்டு பேதம் பாராட்டாது, நின்ற நிலை—யாவற்றையும் இயற்கையான திருவருட் செயல் எனச்சமஷ்டியாகக் கண்டு நிற்கும் நிலையே அஃதாவது முன்னிலைகளை நிறைமுறையோடு உறவு செய்து ஒப்புரவொழுகுதலால் தன்னிலையே முன்னிலை எனக்கண்டு சாந்தி பெற்று நிற்கும் நிலையாகிய சகச நிட்டையே, தான் அது ஆம் தத்துவம் ஆம்—சீவனாகிய தான் அச்சீவத்துவம் நீங்கிச் சிவமாகி நிற்கும் வாய்மையான சமாதி நிலையாகும், தேடும் பொருள்—இவ்வாறு பிரம சொரூபமாகி விளங்கும் முன்னிலையை உறவு செய்து ஒப்புரவொழுகுதலால் தன்னிலையை அமலமாக்கித் தான் அதுவாகும் வாய்மையான சமாதி நிலைகைகூட அறியாது, "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய தன்னிலையாயும் முன்னிலையாயும் விளங்கும் அம்மெய்ப் பொருள் தன்னின் வேறாக வேறு எங்கோ உள்ளது என்று அதனைத்தேடி அலைந்து வருந்துதல் (என்போலும் எனின்), சம்பு அறுத்தார் யாக்கைக்குப் போனவர்—சம்பு என்னும் புல்லை அறுத்துக் கொண்டவர் அதனைக் கட்டிக்கொடு சென்று பயன் அடைவதற்கு அதுவே அமையும் என்று அறியாமல் அறுத்த புல்லையும் விட்டு வேறு இடங்களில் கயிறு தேடிச் சென்று அலமருதல் போலாகும் என்பதாம். சம்பு என்பது ஒருவகைப் புற்சாதி. இது கயிறு போல முறுக்கிக் கட்டுதற்கு உரியது. மண்பெண்பொன் என்னும் முன்னிலைகளை நிறை முறையோடு உறவுபடுத்தி உடம்பினுள் உத்தமனைக் கண்டு அதனை அமலமாக்கி அதன்பயனாகிய தான் அது ஆம் தத்துவத்தை அடையாது—வாய்மையான சமாதிகைகூடப்பெறுதுமெய்ப்பொருளாகிய அவ் உத்தமனை வேறு எங்கோ வெகு தூரத்திற்சென்று அடையலாம்என்று காடும் மலையும் தேடித் திரிந்து போலி நிட்டைகளாலும் போலியான அறத்தாறுகளாலும் அவ் உத்தமன் வடிவமாகிய உடம்பை வாட்டி வருத்தி உஞற்றும் செயல்களால் உண்மைப் பயன் அடைய முடியாது—பிறவி நெறியே உளதாகும் என்பது இதனால் நன்று வலியுறுத்தப்பட்டது.

### ஔவை குறள்

#### உடம்பின் பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண். (1)

அன்னத்தாலாய வுடம்பின் பயனெல்லா
முன்னேனைக் காட்டி விடும். (16)

என ஔவையார் அருளியதும் அறிக.

" தேடித்திரியாதே நெஞ்சே
..................................................
போட்ட இடத்தில் பொருள்தனைத் தேடு
போத நிட்டை யுள்புகுந்துநீ ஆடு.

(செ. 53.)

என்றான் பூரணமான சகசநிட்டையாகிய வாய்மையான சமாதி நிலை கண்டு நித்தியத்துவம் பெற்ற எமது அப்பன் முத்துத் தாண்டவன். மெய்யடியார் எல்லாம் வாய்மையான சமாதி யுடையராய்த் தமது அமல தநு அருள் வடிவாகப்பெற்று அதனோடு மறைந்து உண்மை முத்தி அடைந்தவரேயாவர். அன்றி ஊனம் அறவே ஒழிந்த உடலம் நிலத்துட் புதைக்கப் படும்படி பிணமாகி விழும் என்று நினைக்கவும்சொல்லவும் படுமா?பிரணவ தநு மண்ணால் தடுக்கப்படமாட்டாது. சலத்தால் நனைக்கப்படமாட்டாது. நெருப்பால் எரிக்கப்படமாட்டாது. காற்றால் அசைக்கப்படமாட்டாது. ஆகாசபூதத்தால் அந்தரிக்கப் படமாட்டாது. பெரிய நாயகி அருளால் வேத உண்மைகளைக் கூற எழுந்த சுத்தசாதகம் இவ்வுண்மையை நன்று வற்புறுத்துகின்றது.(சுத்தசாதகம் செ. 78 பார்க்க) பிணமாகி விழுதற்குரிய ஊனமாகிய மருளுடம்பு சீவர்களுக்கே உரியது என்க.

உடலைவிட்டு உயிர் பிரிதலாகிய மரணம் சமாதி நிலையன்று. இறந்தோர் பிணங்களை நிட்டையில் இருந்த பாவனையோடு நிலத்துட்புதைத்தலைச் சமாதி என்பது உபசார வழக்கேயன்றி உண்மையன்று. இறந்தோரைச் "சமாதியடைந்தார்—அதுவானார் சிவமானார்" என்பது உபசார வழக்காகிய போலிவழக்கேயாகும். மற்று, இறந்தோர் சிலர் சரீரங்களை நிலத்துட் குகைசெய்து அதனுள் நிட்டையில் இருந்த பாவனையாக வைத்து மண்ணால் மூடிச் " சமாதிக் கிரியை" செய்யும்படி நூல்கள் விதித்தவாறு என்னையோ? எனின், சிறிது கூறுதும்:—

குரு அருளால் சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளை அநுட்டித்து மேல் சகச நிட்டைக்குரிய பக்குவம் பெறாது இறந்தோர் சரீரங்களையே நிலத்துட் குகை செய்து வைத்து மண்ணால் மூடிச் சமாதிக்கிரியையும் செய்யும் படி நூல்கள் விதித்தனவாகும். (திருமந்திரம் பூரணக்குகை நெறிச் சமாதி; சமாதிக்கிரியை என்பனவற்றில் உள்ள செய்யுட்களை ஆழ்ந்து நோக்குக) இது முத்தி நிலையன்று. சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் அந்நிலையில் எவ்வளவு காலம் வீற்றிருப்பினும் இறந்து பிறப்பவரே யாவர் என்பது முன்னும் சில கட்டுரைகளில் கூறப்பட்டது, ஆதலின் ஈண்டும் விரித்தல் மிகை. "யோகம்" "சகச நிட்டை" என்னும் கட்டுரைகளை நோக்குக. சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் சரீரத்துக்கும் ஒருவகை நிட்டையும் இல்லாத சாமானிய உலகமாக்கள் சரீரத்துக்கும் சிலவகையான் வேற்றுமை உண்டு. ஆதலால் அன்னார் இறந்தபின் அவர் சரீரங்களைச் சுட்டு எரித்துவிடாது புதைத்து ஆதன மீதில் அரசமரமாவது சிவலிங்கமாவது வைத்து சில கிரியைகளும் செய்யும்படி நூல்கள் விதித்தன என்க. சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளாகிய உபாசக நிட்டை என்னும் இச் செயற்கை நிட்டையும் அவரவர் மன நிலைக்கு ஏற்பப் பலவகையினதாகும். இவர் பால் விளங்கிய மருட்சித்திகளுக்கு ஏற்ப இவர் உயிரோடு இருக்கும் காலத்தில் இவர் எண்ணம் பதியப்பெற்றதாய் இவரைப்புதைத்த இடத்தில் சிலகாலமோ பலகாலமோ இவர் மன நிலைக்கு ஏற்றவாறு சில பல மருட் சித்திகள் விளையக்கூடும். இது பற்றியே இவர் இறந்தபின் இவர் சரீரம் நிலத்துட் குகைசெய்து வைக்கப் படுவதாயிற்று. இதனையும் "சமாதி" என்பது உபசாரக்கூற்றே அன்றி உண்மை அன்று என்க. இங்ஙனமாக, தற்காலத்தில் சில மரபினர் பிணங்களையும் படிப்பு செல்வம் அதிகாரம் ஆடம்பரவேடம் முதலியவற்றால் உந்நத நிலையில் வீற்றிருந்தோர் பிணங்களையும் " சமாதி " என்று புதைத்துக் கிரியை செய்தலும் வழக்கில் வந்துவிட்டது. இது சாத்திர சம்மதமன்றாயினும் இதனையும் உலகியல் நோக்கி ஒருவகை உபசாரம் எனக்கூறி அமைவதே உசிதமாகும். ஒருவகை நிட்டையும் இன்றி இறந்தோர் பிணங்களை அபிமான மிகுதியால் யாது செய்யினும் அதனால் ஆம் பயன் ஒன்றும் இல்லை என்பது பின்வரும் திருமூலர் திருவாக்கானும் நன்கு புலப்படும்.

## திருமந்திரம்

காக்கை கவரிலென் கண்டார்பழிக்கிலென்
பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிக்
[கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்
[தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டை
[யே.
(ஷை 1-ம் தந்-யாக்கை நிலையாமை செ. 25)

வாய்மையானசமாதிஎன்னும்பூரணமான ஒடுக்கம்—பூரணமான சாந்தி கைவரப் பெறுவது எளிதன்று; படிப்பில் வல்லபம் பெற்றுப் பெரிய பட்டங்களைப் பெறுவதாலும் செல்வம் அதிகாரம் என்பனவற்றாலும் சீவ முயற்சியால் கண்டுபிடிக்கப்படும் எவ்வகையான தந்திரமந்திரயோக சமாதிகளாலும் முடிவதன்று. மற்றோ, பல கோடி சென்ம நற்றவப் பயனால் கயிலை முதற்குரவனாகிய சற்குருநாதன் தரிசனம் பெற்று அவனால் அருளப்படும் வாய்மையான சாதக யோகங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதால்—மகர வித்தை என்னும் மௌன மந்திராதிக்ய வித்தையைப் பெற்றுப் பயின்று பருகுவதால் உடலுயிர் பூரண அமலம் அடையப்பெற்ற மெய்யடியார்க்கே வாய்மையான சமாதி நிலை கைவரப் பெறுவதாகும் வாய்மையான சமாதி யுடையோர்

வாயோடு கண் மூடி ஓராங்கு வீற்றிருப்பவரல்லர்; உலகர்போல் வாழ்ந்து ஒப்புரவொழுகும் சகச நிட்டையாளரே யாவர்.

"..........................................

ஐயன் வந்து மெய்யகம் புகுந்து கோயில்
[கொண்டபின்
வையகத்தில் மாந்தர் முன்பு வாய்திறப்ப
[தில்லையே"

என்றனர் இந்நிலை கைவரப்பெற்ற சிவவாக்கியர். இதுவே வாய்மையான மௌனம்—சமாதி என்க. இத்தகைய வாய்மையான சமாதியுடையோர் அருமை பெருமை எம்போலிய சீவர்களால் அளவிடுதற்கு அரியது. பின்வரும் பிரமாணங்கள் சமாதி நெறியையும் அந்நெறிக்கண் ஒழுகுவோர் ஆற்றலையும் நன்கு புலப்படுத்தும்.

## திருமந்திரம்.

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்
சந்தியிலான சமாதியிற் கூடிடு
மந்தமி லாத வறிவி னரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.

(ஷை—3—ம் தந்—சமாதி செ. 2)

[விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடல்—மனமும் மதியும் ஒன்றுதல். சந்தி—வியாப்பிய வியாபகசந்தி.]

மூல நாடிமுக் கட்டல ருச்சியுள்
நாலு வாச னடுவு ளிருப்பிர்காண்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே.

(ஷை—ஷை—செ. 15)

[இதனால் சமாதிநெறி நிற்போர் உடலைவிட்டு உயிர் பிரிய மரணமடையாமை கூறப்பட்டது. வெளி-பரமாகாசம்.]

சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டா மிறையுடனேகிற்
சமாதிதா னில்லை தானவ னாகிற்
சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்து
[மே.

(ஷை—ஷை—செ. 14.)

[சமாதி நெறியில் பலவகை யோகங்களும் அடங்கும், "தான் அவன் ஆதல்" ஆகிய வாய்மையான சமாதியுடையோர் தம் முயற்சியால் நிட்டை கூடுவதில்லை. இதுதான் சகச நிட்டை. இது பற்றியே "சமாதி தான் இல்லை தான் அவன் ஆகில்" எனப்பட்டது. அமல முதற்படிகண்டு தான் அவன் ஆகும் சமாதி நெறியாகிய முத்தி நெறிச் செல்லும் மெய்யடியார் பால் வாய்மையான அட்டமா சித்திகளும் அவற்றின் வகைகளான அறுபத்து நான்கு சித்திகளும் இறந்தோரை எழுப்புதல் முதலிய அரிய பெரிய சித்திகளும் நிகழும்.

## சூதசங்கிதை.

அப்பிரசாத சின்னமானந்தமவிர்சுபநேத்தி
[ரவங்கப்
பப்பியல்விகாரமந்தாரத்தெழுதல்பர
[காயப்பிரவேசஞ்செய்தல்
தப்பின்மெய்காட்டல்மறைத்தல்கல்லா
[நூல்தன்னையுந்தடையறப்பேசல்
செப்புறுநிக்கிரகமநுக்கிரகஞ்சிலையாதி
[பேதமுற்பலவே.

(ஷை எக்கிய வைபவ காண்டம் சாமசாகோபநிடத தாற்பரிய முரைத்த அத்தியாயம் செ. 30).

[சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளரால் உஞற்றப்படும் மாயா சித்திகளுக்கும் மெய்யடியார் பால் விளங்கும் அருட் சித்திகளுக்கும் இடையீடு மிகப்பெரிது. அஃது அருளுக்கும் மருளுக்கும் உள்ள இடையீடுபோல்வதாகும். அபிராமிப்பட்டர் உமாபதி சிவாசாரியர் குமரகுருபரர் காளமேகம் கம்பர் முதலிய உபாசனையாளரும் உபாசனைச் சாமிமார் சிலரும் சில மருட் சித்திகளை உஞற்றினர் என்ப. சத்துக்கும் சித்துக்கும் அந்நியோந்நிய சம்பந்தம் உண்டு, சத்தில்லாமல் சித்தில்லை சித்தில்லாமல் சத்தில்லை. சத்தாகிய உடலின் அமல நிலைக்கு ஏற்றதே சித்தின் அருமை பெருமையும் ஆம். ஆதலால் சத்தாகிய உடலம் அமலமடையப் பெறாத மருளுடம்பினர் அருட்சித்திகள் நிகழ்த்துவது அசம்பாவிதமாகும். மருட்சித்திகள் முனைப்போடு கூடியன. அருட் சித்திகள் திருவருட் செயலால் நிகழ்வன. எலும்பைப் பெண்ணுக்கல் முதலை உண்ட பாலனை அழைத்தல் முதலிய அரிய பெரிய அருட் சித்திகள் வாய்மையான சமாதி நெறி நின்ற மெய்யடியாராகிய ஞானசம்பந்தர் வன்றொண்டர் முதலியோர் பால் நிகழ்ந்தனவாகும். சீவன்முத்தர்பால் நிகழும் இத்தகைய அருட் சித்திகள், மருட்சித்திகள் விளைக்கும் உபாசக நிட்டையாளர்களாகிய சீவர்கள் சிந்தனை சொற்செயல்களுக்கு எட்டாதன. மற்ற உபாசக நிட்டையாளருள் ஒருவராகிய உமாபதி சிவசாரியர் என்பார் பெற்றான் சாம்பனுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்தி அளித்தல் என்னும் அரிய பெரிய அநுக்கிரக கிருத்தியத்தை உஞற்றினர் எனப்படுதல் எவ்வாறு? தாமே அடைய முடியாத முத்தி நிலையைப் பிறர்க்கு அளித்துவிட்டனர் என்பது பொருந்துமாறு எங்ஙனம்? என ஆசங்கை நிகழ்வதற்கு இடமாகின்றதே? எனின், கூறுதும். சென்ற பிரபவ ஆண்டில் சுத்தசாதகத்தோடு எம்மால் வெளியிடப்பட்ட "உண்மை முத்தி நிலை" என்னும் கட்டுரையில் உமாபதி சிவாசாரியர் பிறர்க்கு முத்தி அளித்தனர் என்னும் கற்பனை வரலாறு பற்றிக் கூற நேர்ந்துழித் தற்கால உலகியல் நோக்கிச் சமக்கினையாகவும் உபசாரமாகவும் சில கூறி உண்மையை மறைபொருளாக்கி உய்த்துணர வைக்கவேண்டியது இன்றியமையாததாயிற்று. இதுகாறும் வெளிவந்த "வித்தக" வாயிலாக இப்பொழுது உண்மை முத்தியின் இலக்கணத்தையும் அருமை பெருமையையும் பலரும் விளக்கமாக அறிந்திருத்தல் கூடுமாதலால், இக்கற்பனையால் பெறப்படும் உண்மை இன்னதென்பது அமயம் நேர்ந்துழி வெளிப்படையாக விளக்கிக் கூறப்படும்.]

காரியமான வுபாதியைத் தான்கடந்
தாரிய காரணமே ழுந்தன் பாலுற
ஆரிய காரணமாயத் தவத்திடைத்
தாரியல்தற்பரஞ் சேர்தல் சமாதியே.
(ஷ அட்டாங்க யோகப்பேறு சமாதி
செ 8)

[வியாபகமாகிய மாயையைக் கடந்து வியாப்பியமாகிய ஆரிய நிலையோடு ஒன்றி நாதாந்த சோதிப் பிழம்பாகிய ஆரியனைக் கண்டு அவனுதலே சமாதி என்பது இதனுல் கூறப்பட்டது.]

## சூத சங்கிதை

நீடுமானந்தநிருமலவொளியிலொன்றுக்
கூடுமொருருவாவண்ணங்கோடலுஞ்
[சமாதியின்னும்
பாடுகொளைம்பூதத்திணுகுபல்லண்ட
[முற்றும்
ஆடுகொள் விவேகமென்னு மடுசிகைத்
[தழலைக்கொண்டு.

பூதமாத்திரமே யென்னும் புந்திசெய்
[துறத்தகித்துத்
தோதகமின்றி மீட்டும் தூலபூதங்சடம்மை
ஆதரவோடு சத்தாதி யாமெனத் தகித்துப்
[பின்னர்த்
தீதில்சத்தாதியாயசெறிபூதசூக்குமத்தை.

மாயமாத்திரசொரூபமென்றுமாண்புறத்
[தகித்துப்
பாயவம்மாயைதன்னைப்பாங்கருட்
[சார்பினின்று
தேய்தரத் தகித்தானந்தச் சேயோ
[ளிப்பிழம்பின் மூழ்கு
நேயமார்துணிபு மஃதாமென
[நிகழ்த்திடுவரின்னும்.

(ஷ சமாதி விதியுரைத்த அத்தியாயம்.)

இவற்றுல் சமாதி நெறியும் அதன் இயல்பும் கூறப்பட்டன. ஒளிப்பிழம்பின் மூழ்கல் — அஃதாவது தன்னகத்து அகண்டாகார சோதி சொரூபம் அணு அணு ஆக ஆக்கமுற்றுத் தன்னை அழித்துத் தான் என்பதன் இருப்பு இல்லாமல் செய்து விடுவது ஒன்று உளது. இது தான் தன்னுள்ளே குருதரிசனம் பூரணப்பட்டதென்பது — சிவம் உடலில் பூரணமாகக் குடி புகுந்த தென்பது. இதனை அடைவதுதான் மா—மா—மா கடினம். அடைந்தபின் சிதாகாச வெளியில் கலப்பது அத்துணைக் கடினமன்று. இதனுற்றுன் "சோதிப் பிழம்பு" "சோதிப் பிழம்பு" என்று வேதாகம புராண இதிகாசங்கள் அனைத்தும் ஓலமிடுவனவாயின. அதற்குமேல் இன்னதென்று கூற அவைகட்கு உரிமையில்லை. இதனுற்றுன் உண்மை முத்தி நிலை இந்நூல்களால் மறைபொருளாக உய்த்துணர வைக்கப்பட்டது என அறிதல் வேண்டும். குருதரிசனம் பூரணப்பட்ட தென்பதே பிரணவ வடிவம் பெறுதல் என்பது. இவ்வடிவமுடைய வாய்மையான சமாதியாளராகிய சீவன் முத்தர் இயல்பைச் சுத்த சாதகத்துக் கண்டு தெளிக (செ. 69—93). வாய்மையான சமாதியாளராகிய சீவன் முத்தர்க்குரிய ஓ வடிவம் அருளாகிக் கரைந்து சிதாகாசப்பெருவெளியில்மறைந்து சிவாங்கமாகும் என்பதனைப் பின் வரும் பிரபல சுருதி நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க.

## திருமந்திரம்

அழிகின்ற சாயாபுருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக்காணில்
எழுகின்ற தீயிற் கற்பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடல் போமப்பரத்தே
(ஷ 8—ம் தந்—விசுவக்கிராசம் செ. 1.)

(இ—ள்) நீர்க்குமிழியானது நீரிலே தோன்றி அதனுள் மறைந்து தன் சொரூபம் கெட்டதுபோல, சரீரத்தாலான நிழற்சாயையானது அச்சரீரத்தின் வேருகத் தோன்றுவதென்பதழிந்து சரீரத்தோடு உறவு செய்து அச்சாயை என்னும் நாமமும் ரூபமும் அழிந்தபோது, கொளுத்தப்பட்ட தீக்கொழுந்தினுல் கற்பூரமானது தன் இருப்புச் சிறிதும் இன்றி முற்றுகிக் கரைந்தொடுங்குவதுபோல, அருட்சோதியால் விழுங்கப்பட்டு அருளாகிக் கரைதலால் அருளொளியைப் பொழிகின்ற இத்தகைய உடலம் (அருள் வடிவம்) ஞானுகாசத்தில் ஒடுங்கும் என்பது இதன் பொருளாகும். கழிகின்ற நீரில் குமிழியைப் போல அழிகின்ற சாயாபுருடனைக்காணில் என இயையும். பொழிதல் அருளொளியைக் காலுதல். கரைதல்எனினும்ஆம். பரம் = ஞானுகாசம். இருள் மருளிலும் மருள் ஓ வடிவமாகிய தெருளிலும் அவ் ஓ வடிவம் அருளிலும் அவ் அருள் வடிவம் ஞானுகாசத்திலும் ஒடுங்கி முன் போலச் சத்திவடிவாகித் திகழும் என்க. வேத உண்மையாகிய ஒடுக்க முறை இதுவே என அறிதற்பாற்று. ஞானுகாசமே சத்தி வடிவம் எனவும் பிரமம் எனவும் சுருதி கூறிற்று.

"யஸ்ய ஸா பரமாதேவீ
சக்திர் ஆகாச ஸம்ஜ்ஞிதா" |

என்பது கூர்மபுராணம். பரமதேவியானவர் எவருக்குச் சத்தி ஆயினரோ அவர் ஆகாசம் எனப்படுவர் என்பது இதன் பொருளாகும். சுத்த சாதகமும் இவ்வுண்மையை நன்று வலியுறுத்துகின்றது. (ஷ செ 32) வாய்மையான சமாதியுடைய சீவன்முத்தர் அடையும் மீண்டு வாரா நெறியாகிய உண்மை முத்தி இதுவே என அறிக. மேலும் விரிப்பிற் பெருகும்.

இது காறும் கூறியவைகளால் வாய்மையான சமாதியின் பண்பும் பயனும் இன்னவை என்பதும், வாய்மையான சமாதி யுடையோர்க் குரிய பிரணவ மந்திர சரீரம் அருளாகிக் கரைந்து ஞானுகாசத்தில் மறைந்து சிவாங்கமாகும் என்பதும், சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் இறந்தபின் அவர் சரீரங்களைப் புதைத்தலைச் "சமாதி" என்பது உபசாரமே என்பதும், ஒருவகை நிட்டையும்இல்லாத உலகமாக்களைப் புதைத்துச் சமாதிக் கிரியை செய்தல் உலகினர்க்கு இயற்கையாய் உள்ள அறியாமையின் பயனே என்பதும் பிறவும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

# ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்
**வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்**
அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)
(35-ம் வாரத் தொடர்ச்சி).

## கனகசபைப்புலவர்

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள அளவெட்டி என்னுமூரிலே வேளாண் குலத்திலே வைத்தியநாத தம்பிரானுடைய வழியிலே ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னே பிறந்தவர். இவர் தந்தை பெயர் வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணத்திலிருந்து போய்ச் சிதம்பரத்தில் வசித்த சுப்பிரமணிய தம்பிரான் இவருக்குத் தாய் மாமன். இலக்கிய இலக்கணங்கள் நன்கு கற்றவர். சிறு பிராயத்திலே பாடுஞ் சாமர்த்தியம் வாய்ந்தவர். பெற்றோர் சைவ சமயத்தவராயினும் இவர் கிறீஸ்து மதத்தைச் சார்ந்தவர். இவர் வட்டுக்கோட்டையிலிருந்த பழைய சாஸ்திர சாலையிலே ஆங்கிலமுந் தமிழுங் கற்றுத் தேர்ச்சி பெற்றதேயன்றி, அங்கிருந்த உவாட் வைத்தியரிடம் ஆங்கில வைத்தியமுங் கற்றுத்தேர்ச்சி பெற்றவர். ஆங்கில வைத்தியமுந் தெரிந்தவராயினும் தமது தந்தையார் தமிழ் வைத்தியராயிருந்தமையினாலே தாமும் அவ்வைத்தியத்தையே செய்ய வேண்டுமென விரும்பி, அதனைத் தந்தையாரிடத்தேயே கற்றுத் தாமும் அதனையே செய்து தந்தையாரினும் பன்மடங்கு சிறந்து விளங்கினவர். பாடுந்திறமை நோக்கி இவரைப் 'புலவன்' என்றும், 'புலவன் கனகசபை' என்றும் ஊரிலுள்ளார் பேசுவர். இவர் பாக்கள் பழையபாக்கள் போன்று மிகவும் சொற்சுவை பொருட்சுவை அமைந்தனவாகும் பல தனிப்பாக்களன்றித் திருவாக்குப் புராணம் என ஒரு புராணமும் பாடியுள்ளார். இதனைக்கிறிஸ்தவர்கள் மிகக்கொண்டாடுவர். இதில் 'களருக' விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன. இதுவன்றி ஒரு சொற்பல பொருட்டொகுதியாக ஒரு நிகண்டும் பாடியுள்ளார்.

உடுவிலிருந்த சந்திரசேகர பண்டிதர் செய்த அகராதிக்கும் வேறும் பலநூல்களுக்கும் இவர் சிறப்புக்கவிகள் அளித்துள்ளார். சமயோசிதமாகத் தோன்றும் விவேக சாதுரியப் பேச்சுகளும் இவருக்கு உண்டென்றும் அதற்குச் சான்றாக; இவர் ஒருநாள் வேறொருவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் இவருக்குக் கோபமூளத்தக்கதாக யாதோ வார்த்தையாடினமையால் இவர் அவரிற் கோபங்கொண்டு "பேய்க்கூதிமகனே" என்று அவரை ஏசினர் என்றும், அப்போது இவர்மேல் அவருக்குப் பெருஞ்சினமுண்டாக, அதுகண்ட இவர் அவரை நோக்கி "நீர் என்மேல் ஏன் கோபிக்கின்றீர்?" உமது தந்தையார் பேய்க்கு ஊதிப்பார்க்கின்றவர் அல்லவா? அவருடைய மகனென்றல்லவா? உம்மையான் சொன்னேன்" என்று கூறிச் சமயோசிதமாக எழுந்த விவேக சாதுரியப் பேச்சினாலே அவரை மகிழ்வித்தார் என்றும் சிலர் கூறுப. இவர் தாயாரும் கல்வியிற் சிறந்தவர். என்றும் மிஷனரிமாருடைய பெண்பாடசாலைகள் வருதற்குமுன் கல்வியிற் சிறந்து விளங்கிய பெண்களுள் அவ்வம்மையாரும் ஒருவர் என்றும் அறிகின்றோம்.

இத்தகைய புலவர் திலகர் யாவருந் துன்புறுமாறு கிறீஸ்து வருடம் ௧௮௭௩-ல் தை மதியில் ௯-ம் தேதியன்று தேக வியோகமாயினர்.

இவர் ஓர் உலாவும் பாடினார். என அறிகின்றோம். இவர் பாடிய திருவாக்குப் புராணத்திலுள்ள காப்புச் செய்யுள் ஒன்றை அதன் சுவையுணர ஈண்டுத்தருகின்றோம்.

### திருவாக்குப் புராணம்

அனைத்துலகுந் திருவாக்கா லளித்தகில சராசரமு மருட்சித்தத்தே
நினைத்துளவப்படி யமைத்துக் காத்தளிக்குந் தனிமுதலா
[நிகரிலாதான்
தனைத்துதிசெய் தெண்ணுகின்ற தருங்கருமஞ் சித்திபெறத்
[தருகவென்றே
இனைத்தென வொப்போதரிய வினைமலர்த்தாள் சிரத்தேந்தி
யிறைஞ்சுவாமே.

(தொடரும்)

Sandhanam Printing Works, Pondicherry Le Gérant, R. Nagarattinam